FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :- 13 (2019) | இந்து சமயம் – I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததை தெரிவு செய்க.

1) 1. கண்ணகி வழிபாடு 2. முனியப்பர் வழிபாடு 3. ஐயனார் வழிபாடு 4. முருக வழிபாடு 5. மதுரை வீரன் வழிபாடு

2) 1. பிரதிவிம்ப வாதம் 2. பரிணாம வாதம் 3. விகாண்ம வாதம் 4. விவர்த்த வாதம் 5. மாயா வாதம்

3) 1. திருமூலர் 2. திருநாவுக்கரசர் 3. சாக்கியர் 4. அருணகிரிநாதர் 5. எறிபத்தர்

4) 1. நாச்சியார் திருமொழி 2. பெருமாள் திருமொழி 3. பெரிய திருமொழி 4. வேதாந்த சக்கரம் 5. திருவாய் மொழி

5) 1. பேசஞானி 2. புருசதுர்மானி 3. அடிசாரணி 4. ஆயுஸ்யசூக்தம் 5. சதருத்திரியம்

❖ 06 – 10 வரையான வினாக்களில் பொருந்தாத சோடியை தெரிவு செய்க.

6)
1. வீரபத்திரன் விரதம் - சித்திரைத் திங்கள் பரணிநாள்.
2. சக்தி விரதம் - ஐப்பசித் திங்கள் உத்தரநாள்
3. சிவராத்திரி விரதம் - மாசித்திங்கள் வளர்பிறை பிரதமை.
4. கந்தசஷ்டி - ஐப்பசித் திங்கள் வளர்பிறை பிரதமை.
5. விநாயகர் சஷ்டி - கார்த்திகைத் திங்கள் தேய்பிறைப் பிரதமை.

7)
1. பிரகிருதி - சாக்கியம்
2. அவித்தை - வேதாந்தம்
3. ஆணவம் - சைவசித்தாந்தம்.
4. திவ்யதேசம் - வைணவம்
5. தர்மபூத ஞானம் - பௌத்தம்

8)
1. வசந்தம் - இளவேனில்
2. கிரிட்டம் - முதுவேனில்
3. ஏமாந்தம் - கூதிர்காலம்
4. வருவி - மழைகாலம்
5. சரத் - இலையுதிர் காலம்

9)
1. ஆனந்தலகரி - சங்கரர்
2. மாண்டுக்கிய காரிகை - கௌடபாதர்
3. குமாரசம்பவம் - மத்துவர்.
4. பிரம சூத்திரம் - பாத வியனர்
5. ஸ்ரீ பாஷ்யம் - இராமானுஜர்

agaram.lk

10) 1. திருக்களிற்றுப்படியார் - 100 வெண்பா
2. சிவபிரகாசம் - 90 விருத்தப்பா
3. உண்மை விளக்கம் - 53 வெண்பா
4. வினாவெண்பா - 13 வெண்பா
5. கொடிகவி - 21 வெண்பா

❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ', 'ஆ' ஏனும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற விதத்தில் "ஆ" நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 11) | 1. வராகமீகர் | A. செகராச சேகர மன்னன் |
| | 2. இந்திய மருத்துவத்தின் தந்தை | B. பிருகத்சம்கிதை |
| | 3. இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை | C. சபாபதி |
| | 4. செகராசசேகர மாலை | D. சுஸ்ருதர் |
| | 5. சந்தானமணி | E. தன்வந்தரி |

1. ABDEC 2. AECBD 3. BDCAE 4. BEDAC 5. CDBEA

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 12) | 1. சாங்கியம் | A. கௌதமர் |
| | 2. யோகம் | B. பாதராயணர் |
| | 3. நியாயம் | C. கபிலர் |
| | 4. வைசேடிகம் | D. பதஞ்சலி |
| | 5. வேதாந்தம் | E. கணாதர் |

1. BDEAC 2. ABCDE 3. CDAEB 4. DBACE 5. EABDC

agaram.lk

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 13) | 1. கிரு | A. குறி |
| | 2. இலிங்கம் | B. வித்தை ஆசான் |
| | 3. உருத்திராக்கம் | C. திருநீற்றுப் பதிகம் |
| | 4. தீட்சை | D. சிவனின் கண்ணில் இருந்து தோன்றியது. |
| | 5. விபூதி | E. ஞானத்தைகொடுப்பவர் |

1. BADEC 2. ABCDE 3. EDABC 4. CEABD 5. DEABC

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 14) | 1. இயமம் | A. ஒழுக்கவிதிகளைக் கடைப்பிடித்தல் |
| | 2. நியமம் | B. மனஅடக்கம் |
| | 3. தாரணை | C. தீயசெயல்களை தவிர்த்தல் |
| | 4. சமாதி | D. புலடைக்கம் |
| | 5. பிரத்தியாகமம் | E. தியானத்தில் நிலைபெற்றிருத்தல் |

1. ABCED 2. BCDEA 3. CADBE 4. CEABD 5. CABDE

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 15) | 1. கந்தபுராணம் | A. சேக்கிழார் |
| | 2. பெரியபுராணம் | B. பரஞ்சோதி முனிவர் |
| | 3. திருவிளையாடற்புராணம் | C. உமாபதி சிவாச்சாரியார் |
| | 4. கோயிற்புராணம் | D. கச்சியப்ப சிவாச்சாரியார் |
| | 5. திருவாதவூரடிகள் | E. கடவுள் மாமுனிவர் |

1. ABCDE 2. AECBD 3. DABCE 4. CDBEA 5. DCBEA

❖ **16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

16) வைரவ விரதத்தில் ஒன்று,
1. ஆடிச்செவ்வாய் 2. சித்திரப்பரணி 3. சிவராத்திரி
4. மாசிமகம் 5. பங்குனி உத்தரம்

17) சுந்தரமூர்த்தி நாயனார் பெற்ற தீட்சை.
1. நயண தீட்சை 2. சமய தீட்சை 3. ஸ்பரிச தீட்சை
4. விசேட தீட்சை 5. நிர்வாண தீட்சை

18) கேவலாத்துவைதம் என்ற தத்துவ கொள்கையை விளக்கியவர்.
1. நிம்பார்கள் 2. வல்லபர் 3. சங்கரர் 4. ஸ்ரீ சைதன்யர் 5. இராமானுஜர்

19) இந்துதத்துவ உண்மைகளை உபநிடதங்கள் வெளிப்படுத்தும் முறைகளை மாத்திரம் கொண்ட தொகுதி.
1. உரையாடல், செய்முறை, பஜனை 2. விரிவுரை, விவாதம், பாவனை
3. விவாதம், செய்முறை, உரையாடல் 4. உரையாடல், விசாரம், பாவனை
5. செய்முறை, தியானம், பாவனை

20) “கடவுளை அடையும் வழிகளில் கர்மயோகம் என்பது தன்னலம் கருதாதது” என்ற கூற்றுடன் தொடர்புடையது.
1. யோக வழியாகும் 2. அன்பு வழியாகும் 3. அறிவு வழியாகும்.
4. உழைப்பின் வழியாகும் 5. தியான வழியாகும்.

21) கன்மத்தில் செயல்களை கொண்ட தொகுதி.
1. அஞர், இருத்தல், கிடத்தல், பரநித்தை, மேவல்.
2. இருத்தல், கிடத்தல், விடுதல், இயற்றல், மேவல்
3. இயற்றல், விடுதல், மோகம், கற்பம், இருத்தல்.
4. பரநிந்தை, இயற்றல், விகற்பம், குரோதம், மோகம்.
5. விடுதல், இயற்றல், புரநித்தை, மேவல், தகை

22) யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரா கல்லூரியை நிறுவிய பெரியார்களில் ஒருவர்.
1. சேர். பொன். சு. இராசரத்தினம் 2. சேர். பொன் இராமநாதன்
3. பசுபதிச்செட்டியார் 4. ஆறுமுகநாவலர்
5. அருணாசல தேசிகர்

23) தமிழகத்தில் நாட்டை ஆண்ட அரசர்களை “மண்டலதர்” என அழைக்கப்பட்ட காலம்.
1. சங்க காலம் 2. பல்லவர் காலம் 3. விஜயநகர காலம்
4. சோழர் காலம் 5. சங்கமருவிய காலம்.

24) “உயர் பிறமம் என்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை” என கூறும் உபநிடதம்.
1. கடோபநிடதம் 2. தைத்திரிய உபநிடதம் 3. மண்டுக்கிய உபநிடதம்
4. பிரச்சின உபநிடதம் 5. முண்டகோபநிடதம்

25) இசை நூல்களின் தொகுதி
1. யாழ்நூல், பக்தி சூத்திரம், காசியம், தசமூலம்.
2. யாழ்நூல், தசமூலம், மயமதம், மானசாரம்.
3. காமசூத்திரம், பக்தி சூத்திரம், சாகுந்தலம், வீனாதந்திரம்.
4. தேவாரசமகீர்த்தனம், தாகசங்கீர்த்தனம், வீணாதந்திரம், தலவகாரம்.
5. வீணாதந்திரம், சாகுந்தலம், காசியம், மானசாரம்.

26) இலங்கையின் இந்துசமய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய சிங்கள மன்னர்கள்.
1. துட்டகைமுனு, எல்லாளன் 2. சங்கிலியன், எல்லாளன்.
3. காசியப்பன், 2ம் மகிந்தன் 4. தேவநம்பியதீசன், காசியப்பன்
5. துட்டகைமுனு, 2ம் சேனன்

agaram.lk

27) பஞ்ச பூதத்தலங்கள் 3ம் அடங்கும் தொகுதி.
1. காஞ்சி, மதுரை, பழனி
2. காஞ்சி, சிதம்பரம், திருவானைக்கா
3. சிதம்பரம், மதுரை, திருவையாறு
4. காசி, திருவாரூர், திருவாவினன்குடி
5. மதுரை, பிரகதீஸ்வரம், திருநள்ளாறு.

28) சாக்கிய தரிசனம் கூறும் அடிப்படை கோட்பாடுகள்.
1. புருடன், உலகம்
2. பதி, பசு
3. கடவுள், கன்மம்
4. ஆன்மா, மாயை
5. புருடன், பிரகிருதி

29) வேத அங்கங்களில் ஒன்றாக விளங்குவது,
1. மருத்துவம்
2. கணிதம்
3. ஆககம்
4. சோதிடம்
5. வாணியல்

30) நியாய வைசேடிய தரிசனத்தைச் சார்ந்தவர்கள்.
1. வாஸ்கரர், அன்னம்பட்டர்
2. பதஞ்சலி, கணாதர், லொகாசி
3. லொகாசி, பதஞ்சலி, கணாதர்
4. கணாதர், அன்னம்பட்டர், கபிலர்
5. பாஸ்கர், அன்னம்பட்டர், சிவாசித்தர்

❖ **31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.**

31) இராமானுஜர்
1. குணபூரணன் என்பது இவரின் மறுபெயராகும்.
2. இவர் பக்தியை பிரபக்தி எனக் கூறியுள்ளார்.
3. இந்தியாவில் பெரும்புதூரில் அவதரித்தார்.
4. பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைத்தார்.
5. முத்தியின் போது ஆன்மா வைகுண்டத்தைச் சென்றடையும் எனக் கூறினார்.

32) ஆத்திசூடி
1. காப்புச் செய்யுள் சிவபெருமானைப் போற்றவில்லை.
2. வேத உபநிடதங்களின் சாரமாக
3. அறிவியற் கருத்துக்களை வெளிப்படுத்தும் நூலாகும்.
4. தமிழ் நெடுங்கணக்கு முறையில் அமைந்துள்ளது.
5. இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட நூலாகும்.

33) சிவராத்திரி விரதம்.
1. சிவராத்திரி விரதம் 5 வகைப்படும்.
2. மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் அனுஷ்டிக்கப்படும்.
3. சிவ ஆலயங்களில் 4 சாமப்பூசை இடம்பெறும் விரதமாகும்.
4. கருடபுராணம் இவ்விரத மகிமை பற்றி கூறுகின்றது.
5. சிவலிங்கத்தின் அடிமுடி தேடிய கதையுடன் தொடர்புடையது.

34) கண்ணகி வழிபாடு
1. கண்ணகி சிவசக்தியின் அம்சமாகும்.
2. நோய்நீக்கம், மழைவாய் கிடைத்தல் பய நீக்கத்திற்காக வழிபடப்படுகின்றது.
3. சடங்குகளை நடத்துபவர் நம்பியார் என அழைக்கப்படுவார்.
4. குளிர்த்திச் சடங்கிற்கு முதல் நாள் பெண்கள் மடிப்பிச்சை எடுப்பர்.
5. இவ்வழிபாட்டில் கும்மி, கூத்து, கரகம் போன்ற கலைவிழாக்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

35) உமாபதி சிவாச்சாரியார்.
1. வட மொழியில் பௌஷ்கர ஆகமத்திற்கு வியாக்கியானம் எழுதியவராவார்.
2. சிதம்பரத் தில்லைவாழ் அந்தணர் மரபில் உதித்தவர்.
3. இவரது நூல்களில் மறைஞானசம்பந்தரின் பெருமைகூறும் நூல் கொடிக்கவியாகும்.
4. இவர் "தேவார அருள்முறைத் திரட்டு" என்ற நூலை வெளியிட்டார்.
5. சைவ சமயத்தையும், சைவசித்தாந்த மெய்ப்பொருளையும், உலகமக்களுக்கு நிரூபித்த பெருமைக்குரியவராவார்.

agaram.lk

❖ **A – O வரையான தரப்பட்டுள்ள சொற்களுள் மூன்று சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>மகாநாடுகள் | B<br>சந்தான தீபிகை | C<br>அஷ்டோத்திர நீதிநூல் | D<br>மகர சங்கிராந்தி | E<br>சுக்கிர நீதி |
| F<br>போகிப் பண்டிகை | G<br>செந்நாப்புலவர் | H<br>துண்டுப்பிரசுரம் | I<br>சந்தானமணி | J<br>சிலாபரிச்சனம் |
| K<br>மானசாரம் | L<br>சரசோதி மாலை | M<br>உத்தராயணம் | N<br>அதிசயக்கோவை | O<br>இணையம் |

36) ஊடக வகைகளுடன் தொடர்புடைய தொகுதி.
1. AGB 2. CHB 3. DFC 4. AJB 5. AHO

37) ஈழத்துசோதிடக் கலையுடன் தொடர்புடைய தொகுதி.
1. AGB 2. AIC 3. DIC 4. EJF 5. BIL

38) தமிழ் நீதி நூல்களுடன் தொடர்புடைய தொகுதி.
1. BHO 2. AHC 3. DIC 4. CGN 5. EIB

39) தைப்பொங்கல் பண்டிகையுடன் தொடர்புடைய தொகுதி.
1. AHO 2. BHA 3. CIO 4. DFM 5. EIA

40) திருவுருவ வழிபாட்டுடன் தொடர்புடைய தொகுதி.
1. EJK 2. BHA 3. CIO 4. DFM 5. AHI

❖ ***41 – 45 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள தலைப்பிற்கேற்ப மிகப்பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.***

41) சண்முக வடிவமும் தத்துவம்.
1. சண்முக தரிசனத்தின் சிறப்பு குமார சம்பவத்தில் கூறப்பட்டுள்ளது.
2. இலங்கையில் மண்டூர் ஆலயத்தில் சண்முக தரிசனம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.
3. திருச்செந்தூரில் தைப்பூச திருவிழாவில் சண்முக வழிபாடு இடம்பெறுவது ஒரு சிறப்பாகும்.
4. சண்முக வடிவத்தின் பன்னிரு கைதத்துவத்தை திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.
5. "சண்முக பதயே நமோ நமக" என பாழ்பாட்டிச் சித்தர் துதித்துள்ளார்.

42) சிவாகமங்கள்.
1. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி தாருபரீகவுணம் என்ற தலைப்பில் கூறுகின்றன.
2. சிவாகமங்களின் கிரியாபாதம் பவித்திரவிதி பற்றிக் குறிப்பிடுகிறது.
3. கொடியேற்ற நிகழ்வில் மஞ்சட்கயிறானது சைவசித்தாந்த பொருள் உண்மையில் பசுவைக் சுட்டி நிற்கின்றது.
4. சிவாகமங்களின் பிரதிமாலட்சண விதிப்படலத்தில் அணிமா முதலிய அட்டமாசித்திகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
5. கொடியேற்றத்திற்கு முன் நடைபெறும் கிரியைகளில் பேரிதாடனம் படைத்தற் தொழிலைச் சுட்டுகின்றது.

43) விபுலானந்தரும் அவரது பக்தி கோட்பாடும்.
1. விபுலானந்தர் அடிகளார் புலமையும் பக்தியும் மிக்கஞானி.
2. அவர் அறிவம் அறிவாராய்ச்சியும் உடைய அறிஞர்.
3. அவர் கணேச கேத்திர பஞ்சகம் சுப்பிரமணிய சுவாமி இரட்டை மணிமாலை முதலான பக்திப் பிரபந்தங்களை பாடியுள்ளார்.
4. இறைவனிடத்து சரணாகதியே பக்தி அல்லது பிரபக்தி என்பர்.
5. அடிகளார் தூய்மையான தாமரை போன்ற உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வமே உயர்ந்த பக்தி என்பதை "உள்ளக கமலமடி உத்தமனார் வேண்டுவது" என எடுத்துரைத்துள்ளார்.

agaram.lk

44) சிவவாக்கியரும் அவரது தத்துவ முக்கியத்துவமும்.

1. சிவவாக்கியர் புலமையாளர், சித்தர், ஞானி.
2. அவர் சிவ சிவ என்று சொல்லிக் கொண்டு பிறந்தமையால் சிவவாக்கியர் எனப்பட்டார்.
3. கோவிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா? என்னும் அடிகள் மூலம் பொருளற்ற சடங்குகளை சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் புறந்தள்ளியுள்ளார்.
4. "ஒவ்வொரு மனிதனும் இறைவனை அடைவதற்கு தானே முயற்சிக்க வேண்டும். அவன் எப்பொழுதும் நமசிவாய மந்திரத்தை ஓதுதல் வேண்டும்" என்பர்.
5. நாழி உப்பும் நாழி அப்பும் நாயினாவாறு போல" என்னும் அடிகள் "அப்பினொரு உப்பு" என்ற சித்தாந்தக் கோட்பாட்டினை நினைவு கூறுவதாக அமையும்.

45) தட்சணாமூர்த்தி சுட்டும் தத்துவம்.

1. சிவாலயங்களில் தென்திசை நோக்கி வீற்றிருப்பவர்.
2. இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமாகிய இது சிவ மூர்த்தங்கள் ஒன்றாக விளங்குகிறது.
3. வியாக்கியான தட்சணாமூர்த்தி சிவாலயங்களில் அதிகமாக காணப்படும்.
4. பசுவானது பாசத்திலிருந்து நீங்கிப் பதியை அடைவதைக் கட்டுகிறது.
5. யோகா தட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சணாமூர்த்தி, வீணாதார தட்சணமூர்த்தி என நான்கு வகைப்படும்.

❖ **46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழ் தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

46) தானாக தோன்றிய சிவலிங்கத்தை தூலநந்தி புவலுடை தெய்வீகக் சிறப்பினையும் உடையது.

1. திருக்கோணேச்சரம்
2. ஒட்டிச்சுட்டான் தான் தோன்றீச்சரம்.
3. திருக்கேதீச்சரம்
4. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம்
5. நகுலேச்சரம்.

47) சிவனின் அருவுருவத் திருமேனிகள் உண்டு அடங்கும் தொகுதி.

1. பிரமன், சிவன், நாதம்
2. சிவம், நாதம், விந்து
3. சிவம், பக்தி, உருத்திரன்
4. சிவன், உருத்திரன், விந்து
5. பிருமன், விந்து, சிவம்

agaram.lk

48) இந்துக்களின் சமய நம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கு நாளாந்த ஒழுங்குக்கும் வழிகாட்டியாக அமைவது,

1. பத்திரிகை
2. பஞ்சாங்கம்
3. கைரேகை சாத்திரம்
4. கிளிசோதிடம்
5. நாட்காட்டி

49) திருக்கோணேஸ்வர வரலாறு கூறும் நூல் தொகுதி.

1. மகாவம்சம், கோயிற்புராணம்
2. காசைப் புராணம், தீபவம்சம்.
3. தட்சிண கைலாய புராணம், தட்சிணகைலாய மான்மியம்.
4. சேது புராணம், மட்டக்களப்பு மான்மியம்.
5. தட்சணகைலாய புராணம், நல்லைக் குறவஞ்சி

50) பின்வருவனவற்றுள் திருக்குறள் பற்றிய தவறான கூற்று.

1. இது சங்கமருவிய காலத்துக்கரிய நூலாக கருதப்படுகின்றது.
2. ஒழுக்கத்துக்கு முக்கிய இடம் வழங்கியுள்ள ஒரு நூலாகும்.
3. இதில் பொருளீட்டுவதற்கும் அனுபவிப்பதற்குமான துணைக் காரணமாக அரச நீதி கூறப்பட்டுள்ளது.
4. இந்நூலில் ஆசைக்கு நிகரான வளமாகப் பெண் பேசப்படுகிறாள்.
5. ஒருவன் இல்லறம், துறவறம் ஆகிய இரு நெறிகளில் நின்றாலும் செய்வினையின் பயனை தீர்வேண்டுமென்கிறார்.

(1 x 50 = 50 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | இந்து சமயம் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ **பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**பகுதி I**

1) "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" எனும் இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   1. வேதகால சமயநிலை பற்றி விளக்குக.
   2. வேதம் கூறும் கடவுள் கோட்பாடு
   3. வழிபாட்டு முறைகளும் அவற்றின் பயன்களும்.
   4. வேதம் கூறும் தர்மங்களும் அவற்றின் சமூக நன்மைகளும். (5 x 4 = 20 புள்ளிகள்)

2) சங்ககால மக்களின் தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடுகளும் அவர்கள் தம் சமயத்தை பிற்காலத்தில் உயர்நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுத்தது.
   1. வழிபட்ட தெய்வங்கள்
   2. கொற்றவை வழிபாடு
   3. வழிபாட்டு முறைகள்
   4. வழிபாட்டு நம்பிக்கைகள் (5 x 4 = 20 புள்ளிகள்)

3) சிவாகமங்கள் சைவத்திருக்கோயில் அமைப்பு முறைகளையும் சிவாலய கிரியை முறைகளையும் சிறப்பாக விளக்குகின்றன.
   1. ஆகமங்கள் கூறும் பொருள் மரபு.
   2. ஆகமங்களின் சிறப்பியல்பு
   3. ஆகமம் கூறும் ஆலயக் கிரியை
   4. திருவுருவழிபாடு. (5 x 4 = 20 புள்ளிகள்)

agaram.lk

**பகுதி II**

4) இந்து ஆன்மீக மரபில் இராமானுஜரது விசிட்டாத்துவைதம் பெறும் சிறப்பினை சங்கரரது அத்வைத கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   1. விசிட்டாத்துவைதம் பற்றிய விளக்கம்.
   2. அக்கோட்பாட்டின் சிறப்பம்சம்.
   3. சங்கரரது கோட்பாட்டிலிருந்து அக்கோட்பாடு வேறுபடும் விதம்.
   4. அக்கோட்பாடு ஆன்மீக நெறியை வளம்படுத்தும் வகை. (4 + 6 + 6 + 4 = 20 புள்ளிகள்)

5) 6 வகை தரிசனங்களில் யோகம் சிறப்பானதாகும் அதனடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1. யோகத்தின் பிரதான நூல்களையும் ஆசிரியர்களையும் தருக.
   2. அட்டாங்க யோகங்களை உதாரணங்களுடன் தருக.
   3. யோகத்தின் மிகச்சிறந்த நிலையாகிய கைவலய நிலைபற்றி விளக்குக.

(4 + 6 + 10 = 20 புள்ளிகள்)

6) மேல்வருவனவற்றை சைவசித்தார்ந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்க.

1. பதியின் உண்மைத் தன்மை.
2. பசுவின் உண்மைத் தன்மை.
3. பசுவின் இயல்பு
4. பசுவின் இலட்சியமும் அதனை அடைவதற்குரிய வழிகள். (4 + 10 + 6 = 20 புள்ளிகள்)

7) இந்து மருத்துவக் கலையின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

1. நீர் அறிந்த இந்து மருத்துவரின் பெயர் 4 தருக.
2. அதர்வன வேதத்தில் காணப்படும் ஔடதம் பற்றிய குறிப்புக்களை குறிப்பிடுக.
3. இராமாயணத்தில் மூலிகைகள்.
4. இந்து வழிபாட்டில் மருத்துவ சிந்தனைகள். (5 x 4 = 20 புள்ளிகள்)

8) "இலங்கையில் இந்து சமயத்திற்காக தொண்டாற்றிய பெரியார்களில் விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவராவார்" இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வாழ்க்கை வரலாறு
2. சமயப் பணி
3. கல்விப் பணி
4. சமூகப் பணி (5 x 4 = 20 புள்ளிகள்)

agaram.lk